**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு – 1 - 2023**

---

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு - 1 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவி எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2026 யூன் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 01 இன் பிரகாரம் ரூபா 38 மில்லியன் தொகை உரிய சொத்து வகையின் கீழ் காட்டப்படாமல், பொறி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மானியமாக காட்டப்பட்டுள்ளது. | 38 மில்லியன் | 2024/03/31 வரை இந்த மானியத்தின் கீழ் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கால அவகாசம் நீடிக்கப்பட்டதிலிருந்து இவை ஆதன உபகரணங்களுக்குள் பாடசாலை மானியங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பான உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் தொடர்புடைய சொத்து தகவலைப் பெற்ற பின்னர் கணக்கு 2024 சமர்ப்பிக்கப்படும் போது இதனை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நடைமுறையல்லாத சொத்துக்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கல்வி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2021 மார்ச் 23 ஆம் திகதிய 05/2021 ஆம் | பாடசாலைகளால் அடைந்துகொள்ளப்பட்ட செயலாற்றலின் அடிப்படையில் முறைமைக்கு அமைவாக இரண்டாம் | குறிப்பிட்ட நேரத்தில் எழும் தவிர்க்க முடியாத காரணங்களால், மானியத்தின் அங்கீகாரத்திலிருந்தான | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | கட்டத்தின் கீழ் மானியங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிலும் ஏற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்திருக்காத தேசிய பாடசாலைகளுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான உரிய நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சினால் கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. | முழு செயன்முறையையும் மானியம் பெறுபவருக்கு அந்த ஆண்டில் திட்டமிடப்பட்ட கால எல்லைக்குள் பூர்த்தி செய்ய முடியவில்லை. | |
| (ஆ) | பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய ஈஎஸ்ரீ/7/பரீட்சைகள்/05/1007-6 ஆம் இலக்க கடிதம் | கடிதத்தின் அறிவுறுத்தலுக்கு முரணாக, 5 மாகாணங்களுக்கு சாதாரண நாளாந்த வேலை நேரத்தில் நடைபெற்ற செயலமர்வில் பங்குபற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும் வள படிகளாக ரூபா 823,000 செலுத்தப்பட்டது. | மேலும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயலமர்வு, அமர்வு, சிம்போசியம் போன்ற தொழில்நுட்ப விதிமுறைகள் வரையறுக்கப்படவில்லை அல்லது ஒரு அமர்வுக்கு அழைக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச அல்லது அதிகபட்ச பங்கேற்பாளர்களுக்காக எந்தவொரு ஏற்பாடுமின்றி பாரபட்சம் காட்டப்படவில்லை. | பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுடன் இணங்குதல் வேண்டும். |
| (இ) | நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | குறைந்தபட்சம் 02 மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டங்கள் நடாத்தப்படுவதை வரிசை அமைச்சுக்களின் செயலாளர்/ மாகாண சபையின் பிரதம செயலாளர் உறுதிப்படுத்த வேண்டும். | அதன் பிரகாரம் எதிர்காலத்தில் வழிநடாத்தல் குழு கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை மற்றும் செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 96 ஆம் பந்தி | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 96 ஆம் பந்தியின் பிரகாரம் கல்வி அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளிற்காக உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் காணப்படவில்லை. | உள்ளக கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எட்டு நடவடிக்கைகளின் ஊடாக இந்த GEMP செயற்திட்டமும் வெளிநாட்டு செயற்திட்டத்தின் கீழ் செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 2023 கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம், GEMP செயற்திட்டத்திற்காக 2023 மே 10 அளவில் இடைக்கால கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் மற்றும் நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல. | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் | முகாமைத்துவத் தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | | |
| | | அலகுகள் | அலகுகள் | | | | |
| (அ) | பாடசாலை மானியம் | 178 | 92 | 86 பாடசாலைகளின் செலவு தொடர்பான செயன்முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 வரையிலும் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட நிதி முன்னேற்றத்தில் இருந்து 92 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து ரூபா 65 | நிதியை மாற்றுவதில் தாமதம். | கல்விச் செயலாளரின் அங்கீகாரத்துடன், தேசிய பாடசாலை கிளை பல பாடசாலைகளுக்கு நிதியை மாற்றுவதில் தாமதம் காரணமாக செலவிடுவதற்கான கால எல்லையை நீடித்துள்ளது. | வழங்கப்பட்ட நிதியின் பயன்பாடு தொடர்பான சுற்றறிக்கை மற்றும் பதிவேடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக பதிவேடு முறையாக பேணப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மில்லியன் செலவிட்ட பின்னர் ரூபா 26 மில்லியன் தொகை மீதமாக இருந்தது. | | | |
| (ஆ) | பாடசாலை மானியம் | 270 | 19 | 253 பாடசாலைகளில் ரூபா 267.75 மில்லியன் தொடர்பான நிதி முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு 2023 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட நிதி முன்னேற்றத்தில் இருந்து 19 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து ரூபா 1.6 மில்லியன் செலவிட்ட பின்னர் ரூபா 16.4 மில்லியன் தொகை மீதமாக இருந்தது. | நிதியை மாற்றுவதில் தாமதம். | இது 2022 இல் வழங்கப்பட்ட SBLEG சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டது. மேலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தாமதம் ஏற்பட்டதால் சில நிதிகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டதுடன் கிளை முன்னேற்றத்தைப் பெறும் செயன்முறையில் உள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பாடசாலை மானியம் | 105 | 0 | 105 தேசிய பாடசாலைகளுக்கு ரூபா 52.5 மில்லியனை வழங்குதல், 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்களை செலவிடும் பூர்த்திசெய்தல் திகதி 2023 ஆகஸ்ட் 31 வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் செலவினங்கள் | நிதியை மாற்றுவதில் தாமதம். | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தாமதம் காரணமாக சில நிதிகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டதுடன் கிளை முன்னேற்றம் பெறும் செயன்முறையில் உள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொடர்பான முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 வரையிலும் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | கதை புத்தகங்களை அச்சிடுதல் | 6 | 0 | பாடசாலை விவகாரக் கிளை 2022 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களின் உணர்ச்சித் திறன்களை வளர்ப்பதற்காக கதைப் புத்தகங்களை அச்சிடுவது தொடர்பான செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 1.2 மில்லியனை செலவிட்டிருந்தது. 02 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2024 மே 15 அளவில் அந்த 06 சிறு கதைப் புத்தகங்களை உருவாக்கி அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு அதிக காலத்தை செலவிடுகிறது. | இது செயற்படுத்தப்பட்டு வருகிறது. | இலக்கை வினைத்திறனாக அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட வழமைக்கு மாறான கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் முக்கிய நோக்கத்தைத் தவிர, ஒதுக்கீடு இணைப்பு குறிகாட்டிகள் ஏனைய நோக்கங்களுக்காக செயற்படாத 12 கிளைகளில் செயலமர்வு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 81 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | DLIகள் அல்லது IOIகள் இல்லாத கிளைகளும் DLI மற்றும் IOI இற்கு முன்னைய ஐயவினாவில் குறிப்பிட்டது போல் பங்களிப்பு செய்கின்றன, எனவே வழங்கப்பட்ட அந்த நிதிகளுக்கு உலக வங்கியிடமிருந்து எந்த ஆட்சேபனையும் காணப்படவில்லை. | நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மாத்திரமே செயற்திட்டத்தில் நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 வளங்கள் பயன்படுத்தப்படாமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளை அடைந்துகொள்வதற்காக, ரூபா 467 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதில் ரூபா 234 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 233 மில்லியன் தொகை செலவிடப்படாமல் இருந்தது. அதே போல, பணவளிப்பல்லாத இணைப்பு குறிகாட்டிகளுக்கு, ரூபா 877 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதில் ரூபா 191 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 686 மில்லியன் தொகை செலவிடப்படாமல் இருந்தது. | 2023 செப்தெம்பரில் NCOE இல் பழுதுபார்ப்பதற்காக வாக்கு எண்ணை மாற்றியதன் மூலம் ரூபா 200 மில்லியன் தொகை பெறப்பட்டது, ஆனால் செயன்முறை காரணமாக, 2023 இறுதி வரை பணிகள் தொடங்கப்படவில்லை. மேலும் 2024 இல் அனைத்து வேலைகளும் தொடங்கப்பட்டன. மேலும் 2023 பாதீட்டில் இருந்து செலுத்தப்பட வேண்டியிருந்த தொகை கட்டுநிதியை பெறுவதில் தாமதம் காரணமாக 2024 ஆரம்பத்தில் செலுத்தப்பட்டது. | பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதில் ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | செயலமர்வுகளுக்காக ரூபா 120 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 62 சதவீதமான ரூபா 74 மில்லியன் பாடசாலை சமூகத்தின் திறன் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பாடசாலை மாணவர்களின் திறன் அபிவிருத்திக்காக மொத்த செலவினத்தில் 6 சதவீதமான ரூபா 7 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. | பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிப்பது தொடர்பாக அமைச்சு மாத்திரமே பொறுப்பாகும், MOE ஆல் மாணவர்களுக்காக சில நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்ட போதிலும் கிட்டத்தட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் திறன் அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்களாகும். அதன் பிரகாரம் அந்த பயிற்சிகள் மாகாண உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் ISAக்களுக்கு வழங்கப்படுகின்றன, எனவே அவற்றின் மூலம் நலன்கள் மாணவர்களைச் சென்றடையும். எனவே, மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை MOE நடாத்தவில்லை என எங்களால் முடிவுசெய்ய முடியாது, திறன் ஒரு அடுக்கு முறையில் உருவாக்கப்படுகிறது. | பாடசாலை மாணவர்களின் திறன் அபிவிருத்திக்கான செலவினம் அதிகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | அமைச்சின் வளாகத்தில் கேட்போர் கூடங்கள் மற்றும் குழு கூட்ட மண்டப வசதிகள் இருந்த போதிலும் வெளியக நிறுவன வளாகங்களின் விரிவுரை மண்டபங்களைப் பயன்படுத்தி விரிவுரைகளை நடாத்தியதற்காக ரூபா 7.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | முன்னைய கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் கேட்போர் கூடம், குழு மண்டபங்கள் மற்றும் ஏனைய குழு அறைகளை முறையான செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு அவற்றை சீரமைப்பதற்கான சாத்தியத்தை கொள்கை மற்றும் திட்டமிடல் கிளை | அமைச்சு வளங்களை கிடைக்கக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்கனவே கோரியுள்ளது, ஆனால் WB நிதியைப் பயன்படுத்தி அமைச்சிற்கான அத்தகைய வகையிலான சீரமைப்பு செயற்பாடுகளிற்கு செலவு செய்ய முடியாது என உலக வங்கி கூறியுள்ளது. | |

**3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 வரை திறன் அபிவிருத்தியின் கீழ் பதவியணியினர் பயிற்சிக்கு 9 இல் ஒரு பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிக்காக ரூபா 168 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டுள்ளதுடன் மொத்த செலவில் 48.5 சதவீதமாக இருந்த ரூபா 247 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. நாளதுவரை இந்த செயற்திட்டத்துக்காக பதவியணியினர் பயிற்சி தொடர்பில் ஏற்பட்ட செலவினத்தில் இது 147 சதவீதம் ஆகும். | கல்வி அமைச்சின் மனித வள அபிவிருத்தி கிளை கடந்த ஆண்டு திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், தூண்டல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றில் பெரும் பின்னடைவைக் கொண்டிருந்ததுடன் அவை அனைத்தும் நடாத்தப்பட்டுள்ளன. மேலும் 4000 இற்கும் மேற்பட்ட முதன்மை சேவை உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் அவர்கள் தங்கள் சேவைக் குறிப்பின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு மாகாண மட்டத்தில் பயிற்சி பெற்றனர். | செயற்திட்டத்தின் அனைத்து நோக்கங்களையும் அடைந்துகொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டிற்கான பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | GEMP திட்டம் தயாரிக்கப்பட்டு ஏற்கனவே 2023 இல் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டது, கொள்கை மற்றும் திட்டமிடல் கிளை வழக்கமாக ஒரு GEMP திட்டத்தை தயாரித்து கல்வி செயலாளரிடம் இருந்து அங்கீகாரத்தை பெறுகிறதுடன் உலக வங்கியின் எந்த ஆட்சேபனையும் இல்லாமல், இது உரிய காலத்தில் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டது. கணக்காய்வு உத்தியோகத்தர்களின் கள விஜயங்களின் போது இது அவர்களுக்கும் காட்டப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |